20.07.2026.

O.S.No. 14/2024

DW1– பாலகிருஷ்ணன் – த/பெ. கருப்பையா செட்டியார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.07.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதியின் வழக்கு எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்திருந்தார், அதற்கு 3ம் பிரதிவாதி காலம் தாழ்த்திவந்தார். அதனால் எனது தாயார் அ.வ.எண்.42/2004 என்ற வழக்கு தாக்கல் செய்து மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்த வழக்கு தாக்கல் செய்தார். அதில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கான நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து, அதில் 3ம் பிரதிவாதி ஒருதலைபட்சமாக இருந்துவிட்டார். அதனால் 1ம் பிரதிவாதிக்கு, 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 6ல் 1 பகுதியை 06.08.2007ல் எனது தாயாரே ஏலம் எடுத்தார். அதில் வாதி , 3ம் பிரதிவாதியின் சொத்தில் தனக்கும் பாகம் உண்டு என்று தாக்கல் செய்துள்ளார். எனக்கு வாதியின் குடும்ப விவரங்கள் நன்கு தெரியும்.

2. வாதியுடன் உடன்பிறந்தவர் 2ம் பிரதிவாதியாவார். நான் விவசாய தொழில் மற்றும் நிலமுகவராகவும் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு எந்த பதிவும்செய்யவில்லை. எனக்கு தெரிந்த நபர்கள் கேட்டால் பணம் கொடுப்பேன். வட்டி தொழில் செய்வதற்கு நான் முறையான உரிமம் வாங்கவில்லை. நான்தான் 3ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன், 1ம் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3.வாதியின் சித்தப்பா பழனிச்சாமியை எனக்கு நன்கு தெரியும். பழனிச்சாமி எங்கு குடியிருந்துவருகிறார் என்றால் 18/2, ராமசாமி கோவில் 2 வது தெரு, இலஞ்சியில் குடியிருந்துவருகிறார். மேற்படி முகவரி வாதி பங்குகேட்டுள்ள பிராதுதபசில் சொத்தின் ஒருபகுதி என்றால் சரிதான். நான் இதுவரை வட்டிக்கு பணம் கொடுத்து, அது தாவா ஏற்பட்டு அதற்கு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.205/2021 தாக்கல் செய்து, அது சமாதனமாக முடிக்கப்பட்டது என்றால் சரிதான். இதைபோல் பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. வாதி எனது துாரத்து உறவினர். வாதி எனக்கு அத்தானின் மகள் ஆவார். 1ம் பிரதிவாதியிடம், 3ம் பிரதிவாதி கடன் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியும். எப்போது பணம் வாங்கினார்கள் என்றால் 1999ல் ரூ.68 ஆயிரம் 5 புரோநோட்டுகள் வாயிலாக வாங்கினார். 3ம் பிரதிவாதி என்னிடமோ, 1ம் பிரதிவாதியிடமோ வேறு கடன் வாங்கவில்லை. அ.வ.எண்.42/2004, இ.பி.16/2005, அ.வ.எண்.129/2009 வழக்குவிவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும். நான்தான் மேற்கண்ட வழக்குகளை முன்னின்று நடத்தினேன் என்றால் சரிதான்.

5. எனது தாயார், மேற்படி வழக்குகள் சம்பந்தமாக வழக்கறிஞரை சந்திக்கவில்லை என்றும், நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான், கையொப்பம் மட்டும் எனது தாயார் செய்வார். நிறைவேற்றுதல் மனுவில் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து வேறு எதுவும் பற்றுகை

எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. திரிபுர சுந்தரியம்மாளை எனக்கு தெரியும், அவர் எனது உறவினர். திரிபுர சுந்தரியம்மாளுக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் ஒரு தாவா ஏற்பட்டு, அ.வ.எண்.3/2002 , ஐ.ஏ.15/2002 ல், 30.01.2002 ல் தாவா சொத்து பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி விவரங்களை மறைத்துதான் இ.பி.16/2005 என்ற மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.129/2009 வழக்கு என்ன நிலையில் உள்ளது என்றால் நிலுவையில் உள்ளது. இறுதிநிலை தீர்ப்பாணை மனுவை தொடர்ந்து ஐ.ஏ.1339/2011, 1/2023, 10/2025 கடந்த 25.02.2026 ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி தள்ளுபடியானதை தொடர்ந்து எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். தாவா சொத்தில் ஆறுமுகத்திற்கு முழுமையான பங்கு இல்லை என்பதால்தான் நான் மேற்படி இடைக்கால மனுக்களை Restore செய்யவில்லை என்றால் சரியல்ல.

7.என் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர். நான் எந்த முகவரியில் குடியிருந்துவருகிறேன் என்றால் 5/11, ஜீப்ளி கீழ 2 வது தெருவில், இலஞ்சியில் குடியிருந்துவருகிறேன். மேற்படி முகவரியில்தான் குடியிருந்துவருகிறார். எனது தாயார் என்னுடன் குடியிருந்துவரவில்லை என்றாலும், அவர் வேறு முகவரியில் குடியிருந்துவருகிறார் என்றாலும், அவருக்கு 99 வயது என்பதால் என்னுடன் தான் குடியிருந்துவருகிறார்.

8.வழக்கு தாக்கல் செய்யும்போது பிராதிலும், உறுதிக்கூற்றிலும் குடியிருந்துவந்தார், தற்போது என்னுடன்தான் குடியிருந்துவருகிறார். நான் நிறைவேற்றுதல்மனு தாக்கல் செய்யும் சமயத்தில் வாதி பிறந்துவிட்டார், ஆனால் 1ம் பிரதிவாதி கடன்கொடுத்தபோது வாதி பிறக்கவில்லை. அவர் 2004ம் ஆண்டுதான் பிறந்தார். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வாதியின் தாத்தா அப்ரானந்த சுவாமிநாதன்க்கு பாத்தியப்பட்டது. அப்ரனாந்த சுவாமிநாதன்க்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவரது தந்தை வழி பாத்தியப்பட்ட சொத்து. அப்ரானந்த சுவாமிநாதன் பெயரில்தான் தற்போது வரை பிராது சொத்து இருந்துவருகிறது என்றால் சரிதான். அப்ரானந்த சுவாமிநாதன் வாரிசுகளை முதல்வழக்கில் கட்சி சேர்த்தோம் என்றால் சரிதான்.

9. பிராதுதபசில் சொத்து வாதிக்கு தனது தந்தை வழி தாத்தா மூலமாக பாத்தியப்பட்டது என்றால் எனக்கு சட்டநிலைப்பாடுகள் தெரியாது. நான் நிறைவேற்றுதல் மனு தாக்கல்செய்யும்போதோ, அ.வ.எண்.129/2009 வழக்கு தாக்கல் செய்யும்போதோ நான், வாதி மற்றும் 2ம் பிரதிவாதியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றால் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். வாதியின் பங்கை பிற பங்குதாரர்கள் ஆட்சேபனை செய்யவில்லை, 1ம் பிரதிவாதி ஆட்சேபனை செய்ததால் அவரை கட்சி சேர்த்துள்ளோம். 2ம் பிரதிவாதி எங்கு குடியிருந்துவருகிறார் என்றால் எனக்கு தெரிந்து கோயம்புத்தூரில் குடியிருந்துவருகிறார். அப்ரானந்த சுவாமிநாதனின் மகன் வழி வாரிசு என்பதால் வாதி, 2ம் பிரதிவாதிக்கு பங்கு உண்டு என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு 6ல் 1 பங்கு கட்டுப்படாது என்றும் , நிறைவேற்றுதல் மனு

நடைபெற்ற சமயத்தில் 18ல் 1 பங்கும், தற்போது 15ல் 1பங்கும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. நான் வாதியை வேண்டுமென்றே நிறைவேற்றுதல் மனு, அதை தொடர்ந்து தாக்கல் செய்த வழக்குகளில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்த நிறைவேற்றுதல்மனு அதை தொடர்ந்து தாக்கல்செய்த பின் வழக்குகளும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.129/2009 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாய மனு விசாரணையில் இருந்தபோது 3ம் பிரதிவாதியின் சகோதரர் சொர்ண விநாயகம் , சகோதரி கைலாசவடிவு ஆகியோர்கள் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட தொகையை 1ம் பிரதிவாதிக்கு கொடுக்க தயாராக இருந்து மனு செய்தார்கள் என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. இறுதிநிலை தீர்ப்பாய மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தவிவரம் எனக்கு தெரியும். ஆணையர் ஸ்தல பார்வை செய்யும்போது நான் மற்றும் வாதி உடனிருந்தோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், இறுதிநிலை தீர்ப்பாணைமனுவில் வாதி கட்சிஇல்லைஎன்றும், அதனால் அவர் உடனிருக்க அவசியமில்லை என்றால் சரியல்ல, 3ம் பிரதிவாதியுடன் தான் 2ம் பிரதிவாதி, வாதி, வாதியின் தாயார் உடனிருந்தனர். நீதிமன்ற ஆணையர் எந்த தேதியில் ஸ்தல பார்வை செய்யவந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது வாதி என்ன வயது இருக்கும் என்று எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர்அறிக்கையில் வாதி உடனிருந்தது துலங்காது என்றால் எனக்கு தெரியாது. நான் முதல்நிலை தீர்ப்பாயம் பெற்ற விவரம் மற்றும் நிறைவேற்றுதல் மனு பற்றியவிவரங்களை வாதிக்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தனது தாத்தா சொத்தில் 15ல் 1 பங்கு பாகம் உண்டும், அது கிடைக்கக்கூடாது

என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிறைவேற்றுதல் மனுவில் ஆறுமுகத்தின் பங்குபாகத்தை மட்டும்தான் கேட்கமுடியும் என்றும், வாதியின் பங்கு பாகத்தை கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

**ஒப்பம்/– K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**